மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை :- **திருமதி. C. கலைவாணி, B.A., L.L.B.,**

மாவட்ட உரிமையி யல் நீதி பதி .

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2052 பிலவ வருடம் புரட்டாசித் திங்கள் 07 ஆம் நாள்

**இடைநிலை மனு எண்.102/2021-ல்**

**அசல் வழக்கு எண். 125/2016**

மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, ரெங்கநாதபுரம் கிராமம், அக்ரஹாரம் என்ற முகவரியில் வசித்து வரும் கண்ணன் மனைவி, இந்து, வீட்டுக்குடித்தனம் 42 வயதுள்ள சாந்தி ...மனுதாரர்/ பிரதிவாதி

// **எதிர்**//

மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, ரெங்கநாதபுரம் கிராமம், மெயின்ரோடு, குடியானத்தெருவில் வசித்து வரும் சுந்தரேசன் மனைவி, இந்து, வீட்டுக்குடித்தனம் 60 வயதுள்ள ராஜேஸ்வரி ... எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனுவானது அசல் வழக்கில் 08.04.2019 ம் தேதியன்று PW1-ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் முடிக்கப்பட்டதை ரத்து செய்து பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக போடப்பட்டுள்ள அசல் வழக்கை மறு திறப்பு செய்து உத்தரவிடுமாறு பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு தாக்கல் ஆன நாள் :- 19.03.2021

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட் நாள் :- 24.03.2021

இம்மனு 15.09.2021 தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. RS. ஜெயசங்கர், திரு. V.K. கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S. விஜயன், திரு. R. கண்ணதாசன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

( S/d. C. Kalaivani.,)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.